மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இப்போது அரசு, நாள் ஒன்றுக்கு ரூ. 5-50 கொடுக்கிறது. அதை ரூ. 7-50 ஆக உயர்த்துவதற்கு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விலைவாசி ஏற்றம் உண்மைதான்; ஆனால், நிதியையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உணவுப்படி நிர்ணயம் எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை அரசு செய்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஏற்கெனவே, உணவுப்படி நிர்ணயம் 1981-ல் செய்யப்பட்டது ; இப்போது, 1989-ல் செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட காலவரையறை இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வப்போது வருகிற நிலைமையை அனுசரித்தும், விலைவாசியை அனுசரித்தும் இந்த உணவுப்படி நிர்ணயம் செய்யப்படுகிறது.

சென்னை நகரைத் துப்புரவுப்படுத்த புதிய இயந்திரங்கள்

*1130 திரு. பெ. சு. திருவேங்கடம் ;

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1989-ல் சென்னை நகரைத் துப்புரவுப்படுத்த புதிய இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இரண்டு புல்டோசர்கள் மற்றும் இரண்டு கார் மூவர்கள் வாங்கப்பட்டன.

திரு. சா. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை நகரில் குப்பைகள் அகற்றப்படுவதற்காக மாட்டு வண்டிகள் உபயோகப்பட்டு வருகின்றனவே, அவற்றை முழுமையாக நீக்கி, சிறிய லாரிகளை வாங்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்டு வண்டிகளை படிப்படியாகக் குறைக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணம். ஆனால் சில தெருக்களுக்கு பெரிய லாரிகள், அரை லாரிகள் எல்லாம் போக முடியாத இடங்களுக்கு, மாட்டு வண்டிகளை உபயோகப்படுத்தலாம் என்றிருக்கிறது. இருந்தாலும் லாரிகள் அதிகமாக வாங்கப்பட்டதற்குப் பிறகு, படிப்படியாக மாட்டு வண்டிகள் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதிலுரையில், இயந்திரங்கள் வாங்கப்பட்டதாகக் கூறினார்கள். அவைகள் தற்போது இந்த அரசால் வாங்கப்பட்டு, துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், மேலும் குப்பைகள் அதிகமாக, சென்னையிலே சேர்கிறது. அவற்றைக் கொண்டுபோய், வட சென்னையில் கொடுங்கையூர் டம்ப்பிங் கிரவுண்டிலும், தென் சென்னையில், பெருங்குடி டம்ப்பிங் கிரவுண்டிலும் கொட்டப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், சென்னையிலே அதிகமாக 'அக்யூமலேட்' ஆகி சேர்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. டெல்லி மாநகரில், பி.எச்.ஈ.எல். நிறுவனத்தின் மூலம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை நான் உரையாற்றச் சொல்லி அழைக்கவில்லை. வினாக்கேட்கவும். உங்களிடமிருந்து நாங்கள் ஏதாவது தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அதைத் தனியாகத் தெரிந்து கொள்கிறோம்.

திரு. செங்கைசிவம்: ஆகவே, டெல்லியிலே உலர்ந்த குப்பைகளைக் கொண்டு, 'எனர்ஜி' தயாரிக்கப்படுகிறது, பி.எச்.ஈ.எல். இயந்திரத்தின் மூலமாக, அதைப் போல, சென்னையிலும் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்க அரசு முன்வருமா? இது ஒரு நல்ல திட்டம் என்பதால் அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 63 குப்பை லாரிகள் ரொம்பவும் மோசமான நிலையில், கழிவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஏலம் போடுவதற்காக அரசு, உரியவர்களுக்கு அறிவுரைகள் வழங்கியிருக்கிறது. அதற்கு மேலே, ரூ. 150 லட்சம் செலவில் 40 புதிய லாரிகளை வாங்கவும் திட்டமிட்டுள்ளது. அதோடு, 3 டன் எடையுள்ள 15 டிப்பர்கள் வாங்கவும் ஏற்பாடாகியிருக்கிறது.

இதற்கிடையில், 2 மாதத்திற்குள்ளாக, குப்பையை நகர்ப் புறத்திற்கு வெளியில் கொண்டு சேர்க்கிற பணியை சற்று துரிதப்படுத்தியதன் மூலமாக, குப்பைகள் வெகுவாக வெளியேறிக் கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-10 மணி.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகருக்கு அழகு செய்கின்ற மெரினா கடற்கரையில் மிகவும் அசுத்தமாக இப்போது குப்பைகள் எல்லாம் கிடக்கின்றன. அதைத் துப்புரவுப்படுத்துவதற்கு ஏதாவது நவீன இயந்திரங்கள் வாங்கப்பட இருக்கின்றனவா? அதைத் துப்புரவுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடற்கரைக்கு உள்ளே மாநகராட்சியின் எல்லை இல்லை. அது பொதுப்பணித்துறையினுடைய நிர்வாகத்திலே இருக்கிறது. இருந்தாலும் அவைகளை நகராட்சிமன்றத் துப்புரவாளர்கள் அடிக்கடி துப்புரவு செய்து கொண்டிருக்கிறார்கள். முடிந்த வரை அழகுபடுத்தும் முயற்சியில் இரு இலாக்காக்களும் சேர்ந்து பணியாற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெருநகரங்களிலும், முனிசிபாலிட்டிகளிலும், சிறு சந்துகளில் சென்று குப்பைகளை அள்ளி வர, பவர் டில்லர் போன்ற வாகனங்கள், அங்கே இருக்கின்ற, மிகவும் தேங்கியிருக்கின்ற தண்ணீரை எடுக்கவும் பல வகையிலே உபயோகப்படுகின்றன. அதுமாதிரி வாகனங்கள் வாங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும் தேவையை அனுசரித்து அவர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வார்களேயானால், அந்தந்த நிறுவனங்களின் நிதிநிலையை ஒட்டி, அரசு ஆணை வழங்கும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரைத் துப்புரவுப்படுத்துவதற்கு புதிய இயந்திரங்கள் வாங்குவது ஒருபுறமிருந்தாலும்,

நகரை சுத்தமாக வைத்து இருக்கவேண்டும் என்று மக்களிடத்திலே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா? மேலும் அப்படி அதையும் மீறி நகரை அசுத்தப் படுத்துபவர்கள் மீது தண்டனை தருகின்ற அளவில் மாநகராட்சிச் சட்டத்தையும், டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டி ஆக்ட்டையும் திருத்துகின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரைப் பொறுத்தவரையில் பொதுநலனைப் பேணிக் காக்கின்ற சங்கங்கள் அந்த முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டு, அவைகளும் ஓரளவிற்கு அந்தப் பணியைச் செய்து வருகின்றன. மாநகராட்சி மன்றமும் துண்டுப்பிரசுரம் மூலமாகவும் விளம்பரம் மூலமாகவும் நகரைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை மக்களிடத்திலே பரப்பி வருகிறது.

பேரூராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம்

*4318. திரு. என். பழனிவேல்,

திரு. வி. இராமசாமி:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சொந்தக் கட்டிடம் இல்லாத பேரூராட்சிகளுக்கு அரசே அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இது சம்பந்தமாக பேரூராட்சிகளிடமிருந்து கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சொந்தக் கட்டிடம் இல்லாத 38 பேரூராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளது.

திரு. என். பழனிவேல்:- மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்றைக்கு பேரூராட்சிகள் ஏராளமான அளவில் இருக்கின்றன. அவற்றில் 88-க்கு மட்டும் இந்த ஆண்டு புதிதாகக் கட்டிடம் கட்டுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் மொத்தம் தமிழகத்திலே பேரூராட்சிகளுக்கு சொந்தக் கட்டிடம் இல்லாத ஊர்கள் எத்தனை உள்ளன? அவைகளை முழுவதுமாகக் கட்டி முடிப்பதற்கு அரசு திட்டம் ஏதேனும் வைத்துள்ளதா